**தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்**

---

## 1. கணக்குகள்

### 1.1 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினால் நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய தாக்கங்களைத் தவிர தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவுகளையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருந்துரைகள்

#### 1.2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| **(அ) நிதிப்பிரமாணம்** | |
| நி.பி 165 | நாளாந்தம் பெறப்படும் பணத்தைப் பதிவதற்கு ஓர் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 2007 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி திருத்த அதிகாரச்சட்டத்தின் 07 ஆம் பிரிவு | ரூபா 1,714,750 தொகையான கொடுப்பனவுகளில் உள்ளடக்கப்பட்ட ரூபா 374,384 தொகையான பெறுமதி சேர் வரித் தொகையில் 1/3 தொகையான ரூபா 124,794 தொகை பிடித்து வைக்கப்பட்டு உள்நாட்ட இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | பொது நிர்வாகச் சுற்றறிக்கை<br>--------------------------------------------<br>2008 யூன் 26 ஆம் திகதிய 13/2008 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தி | எரிபொருட் படிக்கு உரித்துடைய இரு பதவிகளில் கடமையை மேற்கொள்ளும் அவ் உத்தியோகத்தரிற்கு ஒரு எரிபொருட் படிக்கே உரித்தான போதிலும் தலைவிக்கு எரிபொருட் படிப்பணத்திற்கு மேலதிகமாக ரூபா 407,868 தொகை எரிபொருட் கொடுப்பனவாக மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

#### 2.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிறுவக நடவடிக்கைகள் விளைவித்திருந்த ரூபா 7,596,610 தொகையான பற்றாக்குறையை இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் ரூபா 9,353,654 ஆகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது நிதிசார் விளைவுகளில் ரூபா 1,757,044 தொகையான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. ஒட்டுமொத்தச் செலவினம் ரூபா 2,091,831 ஆல் குறைவடைந்திருந்தமை குறிப்பாக அவ் அதிகரிப்பிற்குத் தாக்கமளித்திருந்தது.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

### 2.2.1 சிக்கனமற்ற கொடுக்கள் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) (i) தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தை அனுராதபுரத்தின் தலாவ என்னுமிடத்தில் இயக்கும் நோக்கில் இதற்கு அவசரமாக ஓர் கட்டிடத்தை ரூபா 16 மில்லியன் செலவில் 2002 மார்ச் 31 ஆந் திகதி நிர்மாணிப்பு வேலைகளைப் பூர்த்திசெய்திருந்த போதிலும் இந் நிறுவகம் அங்கு இயங்கவில்லை. தற்போது இந் நிறுவனம் இயங்கிவரும் நாவல கொஸ்வத்தையில் உள்ள கட்டிடத்திற்கான வாடகையாக 2010 ஆம் ஆண்டிற்காக ரூபா 12,432,000 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ii) அனுராதபுரத்தின் தலாவ என்னுமிடத்தில் உள்ள அலுவலகத்திற்கான பொதுச் செயற்பாட்டுச் செலவுகள் தவிர மீளாய்வாண்டில் அதற்கு இணைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் மற்றும் படிப்பணமாக ரூபா 658,971 வும் மேலதிக நேர வேலைக் கொடுப்பனவாக ரூபா 64,726 ஐயும் உள்ளடக்கி மொத்தமாக ரூபா 723,697 செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் அக்காலப் பகுதியின் போது பெறப்பட்ட விரிவுரை மண்டப வாடகைத் தொகையான ரூபா 153,920 ஆகக் காணப்பட்டது. கடந்த ஆண்டின் போது பெறப்பட்ட வருமானத் தொகையான 173,830 உடன் ஒப்பிடுகையில் தலாவ நிறுவகத்தின் வாடகை வருமானம் 11% ஆல் வீழ்ச்சியடைந்திருந்தது.

**2.2.2 செயலாற்றல்**

**--------------------**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கல்விப் பிரிவு

--------------------

சமூக வேலை (கலைமாணி) ஆங்கில மொழிப் பட்டம்

------------------------------------------------------------------------------

2006/2010, 2007/2011, 2008/2012, 2009/2013 மற்றும் 2010/2014 என்ற தொகுதியாக்கப்பட்ட ஒவ்வொரு தொகுதிக்கான பரீட்சைகள் நடாத்தல், ஆட்சேர்ப்பு, சான்றிதழ் வழங்கல், கள நடவடிக்கைகள் போன்றவை தொடர்பாக வெவ்வேறாக பௌதீக செயலாற்றல் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆராய்ச்சி மற்றும் கொள்கை வெளியீட்டுப் பிரிவு

------------------------------------------------------------------------------

2010 ஆம் ஆண்டின் போது பின்வரும் நாட்களில் மேற்கொள்ளப்படுவதற்குத் திட்டமிடப்பட்ட பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

| | **நிகழ்ச்சித்திட்டம்** | **மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட காலம்** |
|---|---|---|
| (i) | வலையமைப்பிற்காக ஓர் சஞ்சிகையைத் தயாரித்தல் E-news letter | 2010 சனவரி |
| (ii) | சமூக வேலை விடயம் தொடர்பாக எழுதப்பட்ட ஓர் சஞ்சிகை வெளியீடு | 2010 பெப்ரவரி 01 – ஏப்ரல் 25 |

| | | |
|---|---|---|
| (iii) | ஆய்வு செய்யப்படும் நிறுவகத்துடன் வலையமைப்பு இணைப்புத் தொடர்பை கட்டியெழுப்புதல் | 2010 பெப்ரவரி 03 – பெப்ரவரி 18 |
| (iv) | சமூக வேலை விடயங்கள் பின்பற்றப்படும் மாணவர்களின் கள வேலைகள் தொடர்பான மதிப்பீடு | 2010 யூன் 03 – ஒக்டோபர் 30 |

### 2.2.3 கூட்டுத் திட்டம்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டியதுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிவுறுத்தலில் இதனை மேம்படுத்த வேண்டும். மேலும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறெனினும், உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரிக்கப்பட்டிராததுடன் கணக்காய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

நிறுவகத்தினால் 2010 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த செயற்பாடுகளுக்கு உரித்தான செயற்பாட்டுத் திட்டம் காலாண்டு அடிப்படையில் தயாரிக்கப்பட்டிராததுடன் செயற்பாட்டுத் திட்டத்தின் படி பாதீட்டில் ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டங்களுக்காகவும் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகப் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) நிதிக் கட்டுப்பாடு

(ஆ) களஞ்சியக் கட்டுப்பாடு

(இ) மாணவர் உதவுதொகைக் கொடுப்பனவு